DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 60/2018**

**(CNR.No: TNTH06-000072 -20218 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலகிருஷ்ணன் | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **PW1** | |

நாள் :16.02.2024

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** இந்த வழக்கிற்கு முன்பாக 1ம் பிரதிவாதி இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 184/2017 தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கோரி 1ம் பிரதிவாதியால் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவில் எனது தரப்பு எதிருரைக்காக நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 184/2017 வழக்கின் வழக்குரையை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரை சொத்து விபரத்தில் கண்ட சொத்தின் அளவு பத்திரப்படி ஒரு அளவும், பட்டாப்படி அளவும் காட்டி தாக்கல் செய்யுதுள்ளேன் என்றால் சரிதான். எனது உடன் பிறந்த சகோதரர் சதீஸ்கண்ணன் என்ன வேலை செய்கிறார் என்றால் காவல்துறையில் வேலை செய்கிறார். 5ம் வாதி முத்துராஜா என்ன வேலை செய்கிறார் என்றால் இராணுவத்தில் வேலை செய்கிறார்.

2) தாவா சொத்திற்கு மேற்குப்பக்கமுள்ள சுவரை நானும், எனது தகப்பனாரான 1ம் வாதியும், சகோதரரர்களான 3,5 வாதிகளும் சேர்ந்து இடித்து விட்டோம் என்று சொன்னால் சரியல்ல, வாதி மேற்படி சம்பவம் நடந்ததாக கூறும் நாளில் 5ம் வாதி ராஜஸ்தானிலும்,. 3ம் வாதி சென்னையிலும் இருந்தார்கள். நானும்,

எனது தகப்பனாரும் சேர்ந்து மேற்படி சுவரை இடித்ததாக கூறுகிறேன் என்றால் மேற்படி சுவரை இடிக்கவில்லை பராமரிப்பு வேலை செய்தோம். தாவா சொத்திற்கு மேற்குபக்கமுள்ள வீட்டில் 1ம் பிரதிவாதியின் வாடகைதாரர்கள் குடியிருந்தபோது அந்த சுவரை இடித்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சுவரை இடித்தது சம்பந்தமாக 1ம் பிரதிவாதி என் மீதும், எனது தகப்பனார் மற்றும் சகோதரரர்கள் மீது சின்னமனூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் 5பேர் மீது புகார் கொடுக்கவில்லை காவல்துறையில் அழைத்துவிசாரித்து சர்வேயர் மூலம் அளவீடு செய்து அவரவர் நிலத்தை எடுத்துக்கொள்ளும்படி கூறினார்கள். சர்வேயர் மூலம் அளவீடு செய்தோமா என்றால் அளவீடு செய்தோம். சர்வேயருக்கு யார் படி கட்டினார்கள் என்றால் நான் தான் படி கட்டினேன்.

3) 1ம் பிரதிவாதியும் சர்வேயருக்கு படி கட்டினாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபோது 5ம் வாதியான எனது தம்பி இராணுவத்தில் உயர் அதிகாரிகள் மூலம் போன் மூலம் காவல்நிலையத்திற்கு பேசி நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று கூறினார்கள் என்றால் சரியல்ல, பிரதிவாதி புகார் கொடுத்தபின்னர் சர்வேயர் மூலம் 2 முறை அளவீடு செய்யப்பட்டது,. அதன் பின்னிட்டு பிரதிவாதி எனது தகப்பனார் மட்டும் வீட்டில் தனியாக இருந்தபோது தகராறு செய்ததால் எனது தகப்பனார் 5ம் வாதிக்கு போன் மூலம் தகவல் கூறியதன்பேரில் அவர் தனது மேல் அதிகாரிகள் மூலம் மாவட்ட காவல்கண்காணிப்பாளருக்கு தொடர்பு கொண்டு புகார் கூறியுள்ளார். நான் இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும், பிரதிவாதி கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்கத்தான் 5ம் வாதி தனது உயர் அதிகாரிகள் மூலம் காவல்துறையினருக்கு பேசினார் என்றால் சரியல்ல.

4) எனது சகோதரரர்கள் காவல்துறையிலும், இராணுவத்திலும் பணிபுரிவதால் நாங்கள் தாவா சொத்திற்கு மேற்குபக்கமுள்ள சுவரை இடித்தது சம்பந்தமாக காவல்துறையினர் மேல்நடவடிக்கை எடுக்கவிடாமல் தடுக்கப்பட்டுள்ளனர் என்றால் சரியல்ல. 12.11.2017 ம் தேதி எங்களால் சுவர்

இடிக்கப்பட்டதால், தற்போது வரை மேற்படி சுவருக்கு பதிலாக அட்டை , சாக்கு போன்றவற்றால் மறைவு ஏற்படுத்தி பிரதிவாதியின் வீட்டை பயன்படுத்தி வருகிறார் என்றால் பிரதிவாதிக்கு சொந்தமான 1.1/4 செண்டில் அவர் வீடு உள்ளது , எங்கள் இடத்தில் தான் பிரதிவாதி அட்டை, சாக்கு போன்றவற்றால் மறைவு ஏற்படுத்தி வைத்துள்ளார். தாவா சுவர் ஸ்தலத்தில் உள்ளதா, இல்லையா என்றால் பாதி சுவர் உள்ளது, பாதி சுவர் இல்லை. மீதி சுவர் என்ன ஆனது என்றால் மேற்படி சுவர் பாதியளவிற்கு நீண்ட காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட மண் சுவராகும், பாதி சுவர் ஹலோபிளாக் சுவராகவும் இருந்ததில் மண் சுவர் மீது பிரதிவாதிகள் கட்டிடம் கட்டி வேலை செய்ய முயற்சித்ததால் இடிந்து விட்டது. அந்த இடிபாடுகளை மட்டும் நாங்கள் சுத்தம் செய்தோம். மேற்படி மண் சுவர் கட்டி எவ்வளவு காலம் இருக்கும் என்றால் எனக்கு தற்போது 36 வயதாகிறது.

5) எனக்கு விவரம் தெரிந்த காலத்திற்கு முன்பே அந்த சுவர் இருந்தது. எங்கள் இடத்திற்கு எப்போது பட்டா வாங்கினோம் என்றால் 1990ம் வருடத்தில் ஏற்பட்டது. 2018ம் வருடத்திலும் அதே அளவுள்ள பட்டா வாங்கியுள்ளோம். மேற்படி சுவரை நாங்கள் இடித்தபின்னர் தான் பட்டா வாங்கினோம் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும், 2017ம் வருடத்தில் எனது தகப்பனார் முருகேசன் பெயரில் பட்டா வாங்கியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. முன்னதாக எங்கள் சொத்து எனது பாட்டி பேச்சியம்மாள் பெயரிலிருந்து எனது தகப்பனார், அவரது இரு சகோதரர்களுக்கு பாகமாக பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனாரும், அவரது இரு சகோதரர்களும் சேர்ந்து தங்களுக்குள் தலா கிழமேல் 10 அடி, தென்வடல 35 அடியாக பிரித்துக்கொண்டார்கள் என்றால் தெற்குபக்கமுள்ள ரோட்டின் அருகே 3 அடி இடம் விட்டு 10x35 அடியாக பிரித்துக்கொண்டுள்ளார்கள்.

6) அவ்வாறு 3 அடி ரோட்டின் அருகே இடம் விட்டதாக காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் பத்திரப்படியான அளவு,

பட்டாபடியான அளவும் வேறுபாடாக உள்ளது என்றால் சரிதான், ஆனால் ஸ்தலத்தில் பட்டாப்படியான அளவில் தான் உள்ளது. எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதரரர்களுக்கு தான செட்டில்மெண்டாக ஆவணம் ஏற்பட்டது என்றால் 1998ம் வருடம் ஏற்பட்டது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் எனது தகப்பனாருக்கு பட்டா ஏற்பட்டது என்றால் எனது பாட்டி பேச்சியம்மாள் பெயரிலிருந்த 1990ம் வருட மூல ஆவணத்தின் அடிப்படையில் எனது தகப்பனாருக்கு பட்டா ஏற்பட்டது. மூல ஆவணத்தின் அடிப்படையில் பட்டா வாங்கியதாக தவறுதலாக கூறுகிறேன் என்றும், தவறான அளவுகளுடன் பட்டா வாங்கியுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சுவர் இடிந்த பின்னர் மேற்படி சுவரை கட்டினோமா என்றால் இல்லை. தற்காலிகமாக கம்பி வேலி போட்டுள்ளோம்.

7) தற்காலிகமாக கம்பி வேலி பத்திர அளவுப்படியா அல்லது பட்டா அளவுப்படி அமைத்தோமா என்றால் ஸ்தலத்தில் இருக்கும் கிழமேல் 26 அடி அளவைப்பொறுத்து தற்காலிகமாக கம்பி வேலி அமைத்துள்ளோம். நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும், பிரதிவாதியின் இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்து கம்பி வேலிஅமைத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் போது வாசாஆ1 ஆவணம் மூலம் கிழமேல் 32 அடியும், தென்வடல் 38 அடியும் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிஸ்தி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி தனது நிலத்தில் முறையான கட்டிட அனுமதி பெற்று கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாசாஆ1 ஆவணத்தில் சொத்து விபரத்தில் மேற்குபக்கம் முத்துமணி மனையிடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8) நான் பத்திரப்படியான அளவுப்படி வழக்கு தாக்கல் செய்யாமல் பட்டாவில் கண்ட தவறான அளவுகளின் படி வழக்கு தாக்கல் செய்து , பிரதிவாதியின் இடத்திலிருந்து சுவரையும் இடித்து சேதப்படுத்தியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் டி.எஸ்.எண்.221ல் மனுதாரர்

முருகேசன் என்பவர் பெயரில் வீடும், அடங்கல் இருப்பதாக நகர சார்ஆய்வாளர் தெரிவித்தார் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் நகர சார்ஆய்வாளர் டி.எஸ்.எண். 321க்கு பதிலாக டி.எஸ்.எண்.221 என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளார். அது குறித்து நான் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சார் ஆய்வாளர் தவறுதலாக டி.எஸ்.எண் குறிப்பிட்ட விபரம் எனக்கு நீதிமன்ற சாட்சியத்தின் போது தான் தெரியவந்தது. மேற்படி விபரம் தெரிந்துகொண்டே உள்நோக்கத்துடன் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக 1ம் பிரதிவாதி தனது ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

(ஓ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.